# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1997/23 - 2016 දෙසැම්බර් මස 15 වැනි බ්‍රහස්පතින්දා - 2016.12.15

*1997/23 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 15 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு**

*அரசியலமைப்பின் 155 ஓ. உறுப்புரையின் (4) ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட விதிகள்.*

எஸ். ரீ. ஹெட்டிகே,
தவிசாளர்,
தேசிய பொலிஸ் ஆணைக்குழு.

கொழும்பு,
2016, ஒக்டோபர் 27.

விதிகள்

1. இவ்விதிகள் தேசிய பொலிஸ் ஆணைக்குழு (மேன்முறையீட்டு நடைமுறை) விதிகள் 2016 என அழைக்கப்படும்.

2. அரசியலமைப்பின் 155 ஆம் உறுப்புரையின் ஏ மற்றும் ஒ உறுப்புரைகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளதற்கிணங்க குழுவொன்றின் மூலமோ அல்லது பொலிஸ் மா அதிபரினாலோ அல்லது பொலிஸ் உத்தியோகத்தரொருவரினாலோ செய்யப்பட்ட பதவி உயர்வு, இடமாற்றம் மற்றும் ஒழுக்காற்று விடயம் குறித்த ஏதேனுமொரு கட்டளை அல்லது பதவி நீக்கம் தொடர்பாக செய்யப்படும் ஏதேனும் கட்டளை காரணமாக அதிருப்திக்குள்ளாகும் எவரேனுமொரு பொலிஸ் உத்தியோகத்தருக்கு அவர்களினால் வழங்கப்பட்ட அத்தகைய கட்டளைக்கு எதிராக எழுத்துமூல மேன்முறையீடொன்றை இவ்விதிகளின் கீழ் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்க முடியும்.

3. ஆணைக்குழுவுக்கு ஒரு மேன்முறையீட்டை மாத்திரம் செய்ய முடியும்.

4. சகல மேன்முறையீடுகளும் ஆணைக்குழுவின் செயலாளருக்கு முகவரியிடப்பட்டு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். இன்றேல், தேசிய பொலிஸ் ஆணைக்குழு அலுவலகத்திற்கு நேரடியாக சமூகமளித்து ஒப்படைத்தல் வேண்டும். மேன்முறையீடு பெற்றுக்கொள்ளப்பட்டமைக்கான ரசீதைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

5. (அ) ஏற்புடையவாறு குழு அல்லது பொலிஸ் மா அதிபர் அல்லது பொலிஸ் உத்தியோகத்தரொருவர் மூலம் மேற்கொள்ளப்படும் ஏதேனும் கட்டளை தொடர்பில் அதிருப்திக்குள்ளாகும் தரப்பினர் அத்தகைய கட்டளை கிடைக்கப்பெற்ற தினத்திலிருந்து ஆறு (06) மாத காலத்திற்குள் மேன்முறையீடொன்றை செய்தல் வேண்டும் ;

(ஆ) மேன்முறையீடொன்றை சமர்ப்பிப்பதற்கு ஆறு மாத காலம் கடந்துள்ள போதிலும் அந்த மேன்முறையீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் நியாயத்தன்மை மற்றும் நிகழ்வுகளுக்கு தாக்கம் செலுத்திய காரணங்கள் மற்றும் சந்தர்ப்பங்கள் என்பவற்றை கருத்திற்கொண்டு தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் ஏதேனும் மேன்முறையீட்டினை ஏற்றுக்கொள்வது தொடர்பில் கவனத்திற்கொள்ள முடியும். அவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் உரிய ஆறு மாத காலப்பிரிவுக்குள் மேன்முறையீடு சமர்ப்பிக்கப்படவில்லை என்ற விடயத்தை ஆணைக்குழு விசேடமாக குறிப்பிடுதல் வேண்டுமென்பதோடு அந்த மேன்முறையீட்டில் உள்ள விசேட விடயங்களை அடிப்படையாகக்கொண்டு மாத்திரமே அந்த மேன்முறையீடு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றதென்பதையும் குறிப்பிடுதல் வேண்டும்.

6. (அ) மேன்முறையீடொன்றை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளும் போது,

I. சந்தர்ப்பத்திற்கேற்ப பொலிஸ் மா அதிபரிடமிருந்தோ அல்லது பொலிஸ் உத்தியோகத்தரொருவரிடமிருந்தோ அறிக்கைகள், கோவைகள் அல்லது வேறு பிற ஆவணங்களை கோருதல் மற்றும்

II. ஆணைக்குழுவினால் மேன்முறையீட்டாளரை அழைக்க முடியும்.

இந்தப் பந்தியின் கீழ் கோவைகள் மற்றும் ஏற்புடைய கடிதங்கள் கோரப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் அவ்வாறானதொரு வேண்டுகோள் விடுக்கப்பட்ட தினத்திலிருந்து ஒரு மாதத்தை விஞ்சாத காலப்பிரிவுக்குள் அதற்கு பதிலளிப்பது சந்தர்ப்பத்திற்கேற்ப பொலிஸ் மா அதிபரின் அல்லது பொலிஸ் உத்தியோகத்தரொருவரின் கடமையாகும்.

7. மேற்படி விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ள விதிகளுக்கு அமைவாக சமர்ப்பிக்கப்படாத மேன்முறையீடொன்று தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

8. ஏதேனும் மேன்முறையீடு தொடர்பான ஆணைக்குழுவின் தீர்மானத்தை அத்தகைய தீர்மானம் எடுக்கப்பட்ட தினத்திலிருந்து முப்பது நாட்களுக்குள் அதிருப்பதிக்குள்ளான உத்தியோகத்தருக்கு எழுத்துமூலம் அறிவித்தல் வேண்டும்.

9. அரசியலமைப்பின் 155 ஆவது உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள "தேசிய பொலிஸ் ஆணைக்குழு", "ஆணைக்குழு" என இங்கு கருதப்படும்.

10. 2007 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் திங்கட்கிழமை இல. 1495/4 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட நடைமுறை விதிகள் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றன.

12- 1177

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.